**B**

**SL. No. : S**

ಒಟ್ಟು ಪ್ರಶೆಗಳ ಸಂಖ್ಯೆ : 50 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8

Total No. of Questions : 50 ] [ Total No. of Printed Pages : 8

**CCE RR**

**REVISED & UNREVISED**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **Code No. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

**( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater )**

ದಿನಾಂಕ : 25. 06. 2019 ] [ Date : 25. 06. 2019

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-30 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 50-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**

இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

## பகுதி - அ

I. ஒரு தொடரில் விடை தருக : 11 × 1 = 11

1. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது ?
2. இளையான் குடிமாறர் இரவில் மழையில் கைகளால் தடவி எதைப் பறித்து வந்தார் ?
3. காக்கை கரைவதன் நோக்கம் யாது ?
4. நக்கீரர் சங்கப் புலவர்களைப் பிரியும்போது கூறியன யாவை ?
5. எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பவர் யார் ?
6. மொழியின் இலக்கணம் யாது ?
7. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?
8. முதலைக் குகையின் சிறப்பம்சம் என்ன ?
9. உரையிடையிட்ட செய்யுள் என்றால் என்ன ?
10. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?
11. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

II. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 9 × 2 = 18

12. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?
13. தாய், தந்தை மற்றும் மகன் செய்ய வேண்டிய கடமைகளாக பொன்முடியார் கூறுவன யாவை ?
14. பாண்டியனால் மதுரைச் சொக்கநாதன் பிரம்படி பட்டது ஏன் ?
15. சேக்ஸ்பியர், உரையாடல் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார் ?
16. C.F.C. ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது ?
17. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் கிராமத்தைக் கைவிட்டது ஏன் ?
18. விடுகதை என்பது யாது? அதன் வேறு பெயர்கள் யாவை ?

19. உரிச்சொல் என்பது யாது? அதன் வகைகள் யாவை ?

20. செய்யுளின் உறுப்புகள் யாவை ?

III. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 9 × 3 = 27

21. தனக்குவரும் தீமையைப் பிற்பக லேயே அடைபவன் யார் ? விளக்குக.

22. இளையான்குடி மாறனாரும் அவருடைய மனைவியாரும் சிவனடியார் உருவில் வந்த சிவனை எவ்வாறு உபசரித்தனர் ?

23. மனிதனால் பூமிக்கு ஏற்பட்டுள்ள பாதக விளைவுகளாக தென்கச்சியார் குறிப்பிடுன யாவை ?

24. "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு" இத்திருக்குறளில் இடம் பெற்றுள்ள அணி எது ? விளக்கம் தருக.

25. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

இடம் சுட்டிப் பொருளை விளக்குக :-

26. "திங்கள் ஒன்றிருப்பென் இன்னும் திருவுளம்தீர்ந்த பின்னை மங்குவென் உயிரோடு"

27. "ஒற்றுமையில்லா மனித குலம்

உயர்வும் தாழ்வும் வளர்க்குது"

28. "பாவம் கொஞ்சம் நேரமாவது

அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்."

29. "தணிக நின் சீற்றம் ;

தவிர்க இவ்வஞ்சினம்."

IV. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 3 × 4 = 12

30. அனுமான், சீதை இருவரிடையே நிகழ்ந்த உரையாடலைக் கதைப்பாங்காக எழுதுக.

*அல்லது*

பாரதியார் கூறும் பெண்விடுதலை குறித்த கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

31. சேதுப்பிள்ளையவர்களின் உரையாடல் சிறப்பினை நீ அறிந்தவாறு விளக்குக.

*அல்லது*

"இலட்சியம்" குறித்து வைரமுத்து கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

32. சேரன் கண்ணகிக் கோயிலைக் கண்டு வியப்புற்ற நிலையைச் சுவைமாறாமல் விவரி.

*அல்லது*

தீப்பெட்டி ஆபீசிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி திரு கி. இராஜநாராயணன் கூறுவன யாவை ?

V. அடி பிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

33. 'இந்திய நாடிது' என வரும் நாட்டுவாழ்த்துப் பாடல்.

*அல்லது*

'ஈன்று புறந்தருதல்' என வரும் புறநானூற்றுப் பாடல்.

VI. பின்வரும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

34. கிராமங்களே நமது உயிர்நாடி. உழைப்பை முழுமையாகக் கொண்டவர்கள் கிராம மக்கள். அவர்கள் தம் வாழ்க்கை அனுபவங்களைக் கற்பனை வளத்துடன் கலைவடிவில் வெளிப்படுத்தினர். நாடோடிக் கதைகள், நாட்டுப்புறக் கூத்து, பாட்டு, பழமொழிகள், விடுகதைகள் யாவும் நாட்டுப்புறக் கலைகள் ஆகும். இவை வழி வழியாக கிராமங்களில் வழங்கி வந்தவை. ஆனால் தற்போது நாட்டுப்புறக் கலைகள் நசிந்து வருகின்றன. அதற்கான காரணம் மக்களின் ஆதரவும் அரசின் உதவியும் இல்லாமையே ஆகும். ஆத ன் நாட்டுப்புறக் கலைகளை அழியாமல் பாதுகாக்க வேண்டியது நமது கடமை.

வினாக்கள் :

i) நமது உயிர்நாடி எது ?

ii) நாட்டுப்புறக் கலைகள் யாவை ?

iii) நாட்டுப்புறக் கலைகள் நசிந்து வருவதற்கான காரணங்கள் யாவை ?

iv) நமது கடமை யாது ?

## பகுதி - ஆ

VII. பின்வரும் வினா / மற்றும் முழுமைப் பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

35. 'கொடுத்தல்' என்பது ........................ .

(A) வினை எச்சம் (B) தொழில் பெயர்

(C) வினைமுற்று (D) அடிச்சொல்.

36. அருமை + உயிர் ............................ .

(A) அருஉயிர் (B) ஆரூஉயிர்

(C) ஆருயிர் (D) அருவுயிர்.

37. E-mail என்பதன் தமிழாக்கம் ............................. .

(A) மின்னஞ்சல் (B) மின் கருவி

(C) மின்சாரம் (D) மின்னொளி.

38. 'டிசம்பர் பூத்தது', என்பது .....................

(A) இடவாகு பெயர் (B) காலவாகு பெயர்

(C) சினையாகு பெயர் (D) பொருளாகு பெயர்.

39. செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகு செய்வது ...................... .

(A) அளபெடை (B) தொடை

(C) அணி (D) சீர்.

40. 'அகவற்பா' என்பது ...................... .

(A) வெண்பா (B) ஆசிரியப்பா

(C) க ப்பா (D) வஞ்சிப்பா.

41. 'போ போ' - என்பது ........................ .

(A) அடுக்குத் தொடர் (B) அளபெடை

(C) இரட்டைக் கிளவி (D) ஆகு பெயர்.

42. 'ஆறும் ஆறுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது ............................ .

(A) நெடிலடி (B) குறளடி

(C) கழிநெடிலடி (D) சிந்தடி.

43. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல் .............................. .

(A) வெட்சி (B) வஞ்சி

(C) தும்பை (D) வாகை.

44. "காரம்' என பொருள் குறிக்கும் உரிச்சொல் ............................ .

(A) 'உறு' சுவை (B) 'நனி' புகழ்

(C) 'கடி' மிளகு (D) 'கூர்' படை.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக : 4 × 1 = 4

45. ஏரினும் நன்றால் எருவிடுதல்

நீரினும் நன்று அதன் ............................ .

46. மாறன் மனைவி சமைத்தது அமுது

சங்கத் தலைவி சமைத்தது : ............................ .

47. பிட்டு விற்றது <u>வந்தி</u>

மண்ணை சுமந்தது : ............................. .

48. கரைபுரண்டு ஓடுவது <u>ஆறு</u>

உச்சி மலையிலே ஊறி விழுவது : ........................... .

## பகுதி இ

IX. 49. நீ வாழும் பகுதியில் குவிந்து கிடக்கும் குப்பையை அகற்றக் கோரி மாநகரஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக. $1 \times 5 = 5$

*அல்லது*

உன் பள்ளியில் நடந்த குழந்தைகள் தின விழா நிகழ்ச்சிகளை விளக்கி உன் நண்பனுக்கு/ தோழிக்குக் கடிதம் எழுதுக.

X. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக : $1 \times 5 = 5$

50. அ. 'கணினி விளையாட்டுகளும் - விளைவுகளும்'.

ஆ. 'மரம் வளர்ப்போம், மாசு நீக்குவோம்.'

இ. தாய்மொழியின் சிறப்பு.